வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 130/2022

**அரசு தரப்பு சாட்சி 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அய்யனார் | தாலுக்கா | : | பெரியகுளம் |
| தகப்பனார் பெயர் | : | பாண்டியன் | தொழில் | : | |
| ஊர் | : | டி.கள்ளிப்பட்டி | வயது | : | 36/2024 |

<u>(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)</u>

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 2023ம் ஆண்டு, **பாரதீய நாகரிக் சுரக் ஷா சன்ஹிதா** பிரிவு 254ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. நாள் 21.10.2024.

<u>அரசு தரப்பில் 1ம் சாட்சி முதல் விசாரணை</u>

நான் டி.கள்ளிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். பெரியகுளம் பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் தற்காலிக பணியாளராக பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோனது எனது அண்ணன் போதுராஜா ஆகும். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 02.02.2022ம் தேதி இரவு 09.30–10.00 மணியிருக்கும், நான் வீட்டில் இருந்தேன். அப்போது செல்வம் என்பவர், எனது வீட்டுக்கு வந்து, எனது அண்ணன் போதுராஜா வடுகபட்டி பைப்பாஸ் ரோட்டின் பாலத்திலிருந்து கீழே விழுந்து கிடப்பதாக சொன்னார். உடனே நான் பைக்கை எடுத்து, எனது அண்ணனை தேடிச் சென்றேன். நான் சென்றபோது, எனது அண்ணன் பாலத்தின் கீழே தண்ணீரில் மிதந்து கிடந்தார். நான் பார்த்தபோது ஆஜர் 1ம் எதிரி வீரமுத்து மற்றும் 3ம் எதிரி ராஜா ஆகியோர்கள் பாலத்தில் நின்று கொண்டிருந்தார்கள். நான் அவர்களிடம் எனது அண்ணனுக்கு என்னாச்சு என்று கேட்டேன், அவர்கள் பதற்றத்தில் இருந்தார்கள், என்னிடம் எதுவும் சொல்லவில்லை. பின்னர் எனது சித்தப்பா மகன் பரணிதீபன் சம்பவம் அறிந்து அந்த இடத்திற்கு வந்தார். உடனே

நானும், பரணிதீபனும் சேர்ந்து பாலத்தின் கீழே இறங்கி தண்ணீரில் மிதந்த எனது அண்ணனை தூக்கினோம். ஊரிலிருந்தும் ஆட்கள் வந்தார்கள், நாங்கள் எல்லோரும் சேர்ந்து எனது அண்ணன் போதுராஜாவை ரோட்டின் ஓரத்தில் வைத்துவிட்டு, ஆம்புலன்ஸை அழைத்து, ஆம்புலன்ஸில் பெரியகுளம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தோம். பெரியகுளம் அரசு மருத்துவமனையில் எனது அண்ணனை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் இறந்து விட்டதாக சொன்னார்கள். பின்னர் தேனி அரசு மருத்துவமனைக்கு எனது அண்ணனின் பிரேதம் போஸ்ட்மார்டம் செய்வதற்கு கொண்டு செல்லப்பட்டது. எனது அண்ணனின் மரணத்தில் எனக்கு சந்தேகம் இருந்ததால், 03.02.2022 ம் தேதியில் காலை 05.30 மணிக்கு காவல் நிலையம் சென்று புகார் எழுதிக் கொடுத்தேன். **நான் எழுதிக் கொடுத்த புகார் என்னிடம் காட்டப்படுவதுதான். அது அசாஆ1** ஆகும். அதன்பின்னர் நான் தேனி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு வைத்து எனது அண்ணனின் செருப்பு மற்றும் பைக் சாவி ஆகியவற்றை காண்பித்து எனது அண்ணனுடையதா என்று கேட்டார், அதற்கு நான் என் அண்ணனுடையதுதான் என்று சொன்னேன். போலீசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அசாஆ1 புகாரை நான், எனது கைப்பட எழுதினேன். சம்பவத்திற்கு முன்பு எனக்கு எதிரிகளை நன்கு தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் என்னிடம் இந்த வழக்கு பற்றி சொன்னார்கள். இந்த வழக்கு பற்றி போலீசார் என்னிடம் எந்த தேதியில், எங்கு வைத்து சொன்னார்கள் என்றால் அதுபற்றி எனக்கு சரியாக ஞாபகமில்லை. எனது அண்ணன் போதுராஜா பெரும்குடிகாரர் என்றால் சரிதான். எதிரிகளும், போதுராஜாவும் நண்பர்கள் ஆகும். எனது அண்ணன் பாலத்தின் கீழே விழுந்து கிடக்கிறார் என்று என்னிடம் யார் சொன்னார்கள் என்றால் செல்வம் இரவு 09.30–10.00 மணிக்கு சொன்னார். செல்வம் எங்கு சென்றபோது எனது அண்ணன் பாலத்தின் கீழே இறந்து கிடப்பதாக சொன்னார் என்றால் அதுபற்றி என்னிடம் சொல்லவில்லை, அதுபற்றி எனக்கு

தெரியாது. சம்பவ இடத்திற்கு என்னுடன் யார் யார் வந்தார்கள் என்றால் நான் மட்டும்தான் சென்றேன். அப்போது இரவு 10 மணியிருக்கும். சம்பவ இடத்திற்கு சென்றபோது நல்ல இருள் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் லைட் வெளிச்சம் இருக்காது என்றால் அருகில் அண்ணாமலை கோடவுன் உள்ளது, அதன் லைட் வெளிச்சம் இருக்கும். அண்ணாமலை கோடவுனுக்கும், சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 50 லிருந்து 100 மீட்டர் தூரமிருக்கும். சம்பவ இடத்திற்கும், அண்ணாமலை கோடவுனுக்கும் இடையில் தூரம் 2 பர்லாங்க்கு மேலிருக்கும் என்றால் சரியல்ல. அண்ணாமலை கோடவுன் தென்வடல் பைப்பாஸ் ரோட்டின் மேற்கு பக்கம் வயலுக்கு உள்ளே உள்ளது என்றால் சரிதான். அண்ணாமலை கோடவுன் பள்ளத்தில் உள்ளது, ரோடு மேடாக உள்ளது என்றால் சரிதான். புகாரில் எனது அண்ணனை 108 ஆம்புலன்ஸ் மூலம் பெரியகுளம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்தோம் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனது புகாரில் எனது அண்ணனின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான், வீரமுத்து, ராஜா ஆகியோர்கள் அங்கிருந்ததாக சொல்லியுள்ளேன். எனது அண்ணன் பாலத்தின் கீழே தண்ணீரில் கிடந்தாரா, கீழே கிடந்தாரா என்றால் தண்ணீரில் கிடந்தார். 108 ஆம்புலன்ஸை யார் வரவழைத்தார்கள் என்றால் ஊரிலிருந்து நிறைய பேர் வந்தார்கள், யார் அழைத்தார்கள் என்று எனக்கு தெரியாது. ஊரிலிருந்து 20 பேர் வந்தார்கள். ஆம்புலன்ஸ் எனது அண்ணனை ஏற்றும்போது போலீசார் சம்பவ இடத்தில் இருந்தார்கள். போலீசார் எத்தனை பேர் வந்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்ல, எந்த எந்த போலீசார் வந்தார்கள் என்று ஞாபகமில்லை. சம்பவத்திற்கு முன்னர் எனது அண்ணன் மது அருந்தியிருந்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 108 ஆம்புலன்ஸ் எத்தனை மணிக்கு சம்பவ இடத்திலிருந்து புறப்பட்டது என்றால் அது எனக்கு ஞாபகபமில்லை. 108 ஆம்புலன்ஸ் மருத்துவமனைக்கு சென்றபோது எத்தனை மணியிருக்கும் என்றால் சுமார் இரவு 11 மணியிருக்கும். சம்பவ இடத்திற்கும், மருத்துவமனைக்கும் எவ்வளவு எத்தனை தூரம் என்றால் எனக்கு தெரியாது. 108 ஆம்புலன்ஸ் தென்கரை காவல் நிலையத்தை கடந்துதான் மருத்துவமனை செல்ல வேண்டுமென்றால் சரிதான்.

மருத்துவமனையில் நாங்கள் சென்றபோது மருத்துவர் இருந்தாரா என்றால் நர்ஸ் இருந்தார். மருத்துவமனை சென்றபின்புதான் எனது அண்ணன் இறந்தாரா என்றால் எனது அண்ணனை பரிசோதித்துவிட்டு எனது அண்ணன் இறந்து விட்டதாக மருத்துவர் சொன்னார். காவல் நிலையத்திற்கும், மருத்துவமனைக்கும் எத்தனை துாரம் என்றால் பக்கத்தில்தான் உள்ளது, சரியாக துாரம் சொல்லத் தெரியவில்லை. எனது அண்ணன் இறந்த சேதியை பக்கத்தில் உள்ள காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னனோ என்றால் சொன்னேன். நான் தகவல் சொன்னவுடன் போலீசார் பிரேதத்தை பார்க்க வந்தார்களா என்றால் இல்லை. எனது அண்ணன் இறந்தது தெரிந்தவுடன், காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. தேனி அரசு மருத்துவமனையில் எனது அண்ணனின் பிரேதத்தை பரிசோதனைக்கு கொண்டு சென்றிருக்கிறார்கள், அதன்பின்பு மறுநாள் காலை 05.30 மணியளவில் புகார் கொடுக்க காவல் நிலையம் சென்றேன். காவல் நிலையம் சென்றபோது என்னுடன் எனது மாமா வேல்மணி மற்றும் ரவி ஆகியோர்கள் இருந்தனர். நான் காவல் நிலையம் சென்றபோது ஆய்வாளர் மணிகண்டன் அங்கிருந்தார். அதன்பிறகு போலீசாருடன் நான் சம்பவ இடம் செல்லவில்லை. அதன்பிறகு போலீசாரை நான் பார்க்கவில்லை. நான் 03.02.2022 தேதி காலை 6 மணிக்கு புகார் கொடுக்க சென்றபோது, ஆஜர் எதிரிகள் காவல் நிலையத்தில் இருந்தார்கள். சம்பவ இடம் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். வாகனங்கள் அதிகம் செல்லும் நெடுஞ்சாலை என்றால் சரிதான். எனது அண்ணனை முதலில் பார்க்கும்போது தண்ணீரில் மல்லாந்து கிடந்தார். நான் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றாலும், நான் போலீசார் சொல்லிக் கொடுத்தற்கு இணங்க பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அண்ணன் போதுராஜா மிகுந்த குடிகாரர் என்பதால் அதிக போதையில் தடுக்கி பாலத்திலிருந்து கீழே விழுந்து இறந்து விட்டார் என்றாலும், எனது அண்ணனின் இறப்பிற்கும், எதிரிகளும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல.

**<u>2 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது போலீஸ் விசாரணையில் நான் மட்டும்தான் சம்பவ இடம் சென்றேன் என்று கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நானும், செல்வமும் வண்டியில் சென்றோம் என்று சொல்வது தவறு என்றால் நான் எனது வண்டியில் சென்றேன், செல்வம் அவரது வண்டியில் சென்றார். போலீசார் விசாரணையில் போலீசார் என்னிடம் எனது அண்ணனின் செருப்பு மற்றும் பைக் சாவியை மருத்துவமனையில் வைத்து அடையாளம் காட்ட கேட்டார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என்னிடம் எனது அண்ணன் பாலத்தின் கீழே கிடப்பதாக சொன்னவரின் பெயர் செல்வக்குமார் ஆகும். செல்வக்குமாரின் வீடு எனக்கு தெரியாது. கள்ளிப்பட்டியை சேர்ந்தவர் என்று தெரியும், ஆள் யார் என்று தெரியும். செல்வக்குமாரிடம் எனது அண்ணன் பாலத்தின் கீழே கிடப்பதாக சொன்னது பற்றி எப்படி தெரியும் என்று நான் அவரிடம் கேட்டேனா என்றால் இல்லை. நான் சம்பவ இடம் சென்றபோது மணி 10.15 மணியிருக்கும். பாலத்திற்கும், ஆற்றுக்கும் எத்தனை அடி உயரமிருக்கும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பாலத்தின் கீழே எனது அண்ணனை பார்த்தவுடன் யார் முதலில் இறங்கினோம் என்றால் நானும், எனது தம்பி பரணிதீபனும் இறங்கினோம். பரணிதீபன் நான் சென்று 10 நிமிடத்திற்குள் வந்து விட்டார். ஆற்றில் தண்ணீர் கிடந்தது, எத்தனை அடி ஆழத்திற்கு தண்ணீர் கிடந்தது என்று தற்போது ஞாபகமில்லை. நான் சம்பவ இடம் சென்றிருந்தால் பாலத்திலிருந்து ஆற்றுக்கான உயரம் தெரிந்திருக்கும் என்றாலும், எத்தனை அடி ஆழத்தில் தண்ணீர் கிடந்த விவரம் தெரிந்திருக்கும் என்றாலும், நான் சம்பவ இடம் செல்லாததால் தான் என்னால்அதுபற்றி சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. எனது அண்ணனை தண்ணீரிலிருந்து துாக்கி மேலே ரோட்டுக்கு கொண்டு வந்தபோது எனது அண்ணனின் சட்டை பாக்கெட்டில் மொபைல் போன் இருந்ததா என்றால் இல்லை, அது தண்ணீரில் இருந்தது. செல்போனை யார் எடுத்து போலீசாரிடம் ஒப்படைத்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. செல்போன் தண்ணீரில் இருந்ததை பார்த்தேன், ஆனால் அதை யார் எடுத்தது என்று தெரியாது. தண்ணீரிலிருந்து எனது அண்ணனை நானும், எனது தம்பியும் மட்டும்தான் மேலே

ரோட்டிற்கு தூக்கி வந்தோம். அதன்பிறகுதான் பொதுமக்கள் வந்தார்கள். நாங்கள் ரோட்டுக்கு வந்து எத்தனை நேரம் கழித்து ஊர் மக்கள் வந்தார்கள் என்று என்னால் நேரம் கணிக்க முடியவில்லை. பாலத்தின் நீளம் 20 அடி, அகலம் 1 அடி இருக்குமா என்றால் என்னால் நீளம், அகலம் பற்றி கணிக்க முடியவில்லை. சம்பவ இடத்தில் எனது அண்ணனின் பொருட்கள் ஏதேனும் இருந்ததா என்றால் பைச்சாவி மற்றும் செருப்பு இ,ருந்தது. பாலத்தின் எந்த திசையில் இருந்தது என்றால் திசை தெரியவில்லை, ரோட்டின் மேலே இருந்தது. ஆம்புலன்ஸ் எத்தனை மணிக்கு வந்தது என்று தெரியவில்லை. ஆம்புலன்ஸ் வருவதற்கு முன்பு காவல்துறையினர் வந்தாரா என்றால் வந்தார்கள். போலீசார் வரும்போது எதிரிகள் சம்பவ இடத்தில் இருந்தார்கள். எதிரிகளையும் போலீசார் கூட்டி வந்து விட்டார்கள். நான் சொல்வதுபோல் எதிரிகளை காவல்துறையினர் கூட்டி வரவில்லை, 3 வது எதிரி ராஜாவுக்கு 1ம் எதிரி போன் மூலம் தகவல் கொடுத்தவுடன் 3 ம் எதிரி ராஜா கள்ளிப்பட்டியை சேர்ந்த செல்வம் என்பவருக்கு 9.15 மணிக்கே போதுராஜா பாலத்தின் கீழே பள்ளத்தில் கிடப்பதை தகவல் கொடுத்துவிட்டார் என்றாலும் அதன் பிறகு 3 ம் எதிரி ராஜா போதுராஜாவை காப்பாற்ற வேண்டுமென்று பாலத்திற்கு கீழே தண்ணீரில் இறங்கி போதுராஜை தரைக்கு கொண்டு வந்து விட்டார் என்றாலும் அப்போது 3 ம் எதிரி ராஜாவிற்கு கண்ணாடி பீங்கான் வலது காலில் குத்தி காயம் ஏற்பட்டு விட்டது என்றாலும், ஆம்புலன்ஸ் வருவதற்கு முன்பு காவல்துறையினரிடமிருந்து போதுராஜாவின் மது போதையில் மயக்க நிலையில் இருந்ததை தெரிந்து கொண்டு, போதுராஜாவை யார் தண்ணீரிலிருந்து இழுத்தது என்று கேட்டதற்கு 3 ம் எதிரி ராஜா காலில் ஏற்பட்ட காயத்தை பார்த்த காவல் துறையினர் 3 ம் எதிரி ராஜாவையும், வீரமுத்துவையும் மருத்துவமனைக்கு அனுப்பி விட்டார்கள் என்றாலும், அதன் பிறகு 2 ம் எதிரி போதுராஜாவின் டிரைவர் என்பதால் தனது உரிமையாளருக்கு காயம் பட்ட விவரத்தை தெரிந்து அவரும் மருத்துவமனைக்கு சென்று விட்டார் என்றாலும், 1 முதல் 3 எதிரிகள் போதுராஜாவை கொலை செய்வதற்கான எண்ணம் இருந்தால் அவர்கள் சம்பவ இடத்திற்கோ, மருத்துவமனைக்கோ வந்திருக்க மாட்டார்கள் என்றாலும் சரியல்ல.

போதுராஜாவிற்கும், அவரது மனைவிக்கும் பிரச்சனை உள்ளது என்றால் சரிதான், கருத்து வேறுபாடு உள்ளது. போதுராஜாவின் முதல் மனைவி இறந்து விட்டார், முதல் மனைவியின் தங்கையைத்தான் 2 வதாக திருமணம் செய்துள்ளார், 2 மாதம்தான் இருவரும் சேர்ந்து இருந்தார்கள். 2 மாதமும் தாமரைக்குளம் தாசில்தார் நகரில் 15 பதினைந்து நாட்களும், திருமணம் முடிந்தவுடன் கலெக்டர் ஆபிஸின் கிழக்கு பக்கம் குடியிருந்தார் என்றால், அதன்பிறகு கலெக்டர் ஆபிஸின் மேற்கு பக்கம் குடியிருந்தார்கள் என்றால் இல்லை, எங்கள் ஊருக்கு வந்து விட்டார்கள். 2 வது மனைவி எங்கள் ஊருக்கு வரவில்லை என்றாலும், அவர் நேராக வடுகபட்டியில் உள்ள அவரது தாயார் வீட்டுக்குசென்று விட்டார் என்றாலும், அந்த பிரச்சனையின் காரணமாக எனது அண்ணன் மதுபோதைக்கு அடிமையாகி இருந்தார் என்றாலும் சரியல்ல. சம்பவத்தன்று இறந்த போதுராஜா மிக அதிகமாக மது அருந்தி அந்த போதையில் தானாகவே பாலத்திலிருந்து கீழே விழுந்து விட்டார் என்று சொன்னாலும் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லாததால்தான் என்னால் சம்பவ இடத்தை பற்றிய விவரங்களை குறிப்பிட்டு சொல்ல இயலவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எனது அண்ணன் இறந்தவுடன் புகார் கொடுக்கவில்லை என்றாலும், பின்னர், பின்யோசனை செய்து புகார் கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. மருத்துவமனைக்கு வந்த எதிரிகளை காவல்துறையினர் அன்று இரவே காவல் நிலையத்தில் அழைத்து வைத்து, அவர்களுக்கு எதிராக பொய்யாக வழக்கு

தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே , என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்/- S.சமீனா)
21.10.2024
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.

வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 130/2022

**அரசு தரப்பு சாட்சி 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அபிநயா | தாலுக்கா | : | பெரியகுளம் |
| கணவர் பெயர் | : | போதுராஜா | தொழில் | : | இல்லத்தரசி |
| ஊர் | : | வடுகபட்டி | வயது | : | 27/2024 |

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 2023ம் ஆண்டு, **பாரதீய நாகரிக் சுரக் ஷா சன்ஹிதா** பிரிவு 254 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. நாள் 21.10.2024.

**அரசு தரப்பில் 2ம் சாட்சி முதல் விசாரணை**

நான் தற்போது வடுகபட்டியில் எனது அம்மா வீட்டில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லத்தரசி ஆகும். இறந்த போதுராஜா எனது கணவர் ஆகும். 02.02.2022 தேதியில் சுமார் இரவு 10.30 மணியளவில் எனக்கு போன் மூலம் போதுராஜா இறந்து விட்டதாக எனது சித்தப்பா முருகன் தகவல் சொன்னார். உடனே நான் சம்பவ இடம் சென்று பார்த்தேன். நாங்கள் சம்பவ இடம் சென்றபோது எனது கணவர் போதுராஜாவை அங்கிருந்து கொண்டு மருத்துவமனைக்கு சென்று விட்டார்கள். உடனே நான் பெரியகுளம் அரசு மருத்துவமனைக்கு வந்தேன், அங்கு எனது கணவர் இறந்து விட்டதாக சொன்னார்கள். அதன் பிறகு தேனி அரசு மருத்துவமனைக்கு எனது கணவரின் பிரேதத்தை கொண்டு சென்றார்கள். இது சமபந்தமாக என்னை போலீசார் விசாரணை செய்தார்கள்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பந்தமாக எந்த விவரங்களும் நேரடியாக தெரியாது. போலீசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்கள். நான் பி.ஏ. படித்துள்ளேன். எனக்கும்,

எனது வீட்டுக்காரருக்கும் அடிக்கடி சண்டை வரும் என்றால் கருத்து வேறுபாடு வரும், நான் பேசாமல் என் தாய் வீட்டுக்கு வந்துவிடுவேன், அவர் என்னை அடித்து துன்புறுத்த மாட்டார். எனது கணவர் மிகுந்த குடிகாரர் என்றால் அவரது நண்பர்கள் அவரை அழைத்து சென்று அவருக்கு குடிப்பழக்கத்தை பழக்கி விட்டார்கள். எனக்கு இந்த வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றாலும், போலீசார் சொல்லிக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>2 மற்றும் 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனது கணவர் இறந்த விவரத்தை எனது சித்தப்பா முருகன் சொன்னதாக நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை. எனக்கும், போதுராஜாவிற்கும் நடந்த திருமணம் கட்டாய திருமணம் என்றால் சரியல்ல. எங்கள் திருமணம் பெரியகுளத்தில் உள்ள பெரிய கோவிலில் நடந்தது. திருமணம் முடிந்த அன்றே கலெக்டர் அலுவலகத்தின் கிழக்கு பக்கத்தில் உள்ள வீட்டில் தங்கினோம், 2 மாதங்கள் தங்கியிருந்தோம். அதன் பிறகு கலெக்டர் அலுவலகத்தின் மேற்கு பக்கம் குடியிருந்தோம். அதன் பிறகு கள்ளிப்பட்டியில் உள்ள சொந்த வீட்டில் குடியிருந்தோம். நான் சொல்வதுபோல் நானும், போதுராஜாவும் எப்போதும் சேர்ந்து வாழ்ந்ததில்லை என்றாலும், போதுராஜாவின் மகன் போதுராஜாவின் அம்மாவிடமும், மகள் எனது அம்மாவிடமும் இருக்கிறார்கள் என்றாலும், எங்கள் இருவருக்கும் இடையே நல்ல உறவு என்பதால் அவர் மது பழக்கத்திற்கு அடிமையானார் என்று சொன்னாலும் சரியல்ல.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே ,
என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால்,
கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு
படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை,
ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில்
கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்/- S.சமீனா)
21.10.2024
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.

வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 130/2022

**அரசு தரப்பு சாட்சி 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பரணிதீபன் | தாலுக்கா | : | பெரியகுளம் |
| தகப்பனார் பெயர் | : | தொத்தன் | தொழில் | : | லேப் டெக்னீசியன் |
| ஊர் | : | டி.கள்ளிப்பட்டி | வயது | : | 33/2024 |

<u>**(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)**</u>

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 2023ம் ஆண்டு, **பாரதீய நாகரிக் சுரக் ஷா சன்ஹிதா** பிரிவு 254 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. நாள் 21.10.2024.

<u>**அரசு தரப்பில் 3ம் சாட்சி முதல் விசாரணை**</u>

நான் தற்போது டி.கள்ளிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் லேப் டெக்னீசியனாக பெரியகுளம் லட்சுமி மருத்துவமனையில் பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கில் இறந்த போதுராஜா எனது அண்ணன், பெரியப்பா மகன் ஆகும். ஆஜர் எதிரிகளை தெரியும். 02.02.2022ம் தேதி நான் வீட்டில் இருந்தேன். அப்போது அசா1 எனது அண்ணன் அய்யனாரின் மனைவி பாக்கியலட்சுமி எனக்கு போன் செய்து எனது அண்ணன் போதுராஜா பைப்பாஸ் ரோட்டில் கீழே விழுந்து கிடப்பதாக தகவல் சொன்னார். அசா1 அங்கு சென்றிருப்பதாகவும், என்னையும் போய் பாருங்கள் என்று அசா1ன் மனைவி பாக்கியலட்சுமி சொன்னார். உடனே நான் கிளம்பி பைக்கில் சம்பவ இடம் சென்றேன். நான் சென்றபோது அசா1 அய்யனார் அங்கிருந்தார், அருகில் 1ம் எதிரி வீரமுத்து, 3ம் எதிரி ராஜா ஆகியோர்கள் இருவரும் இருந்தார்கள். நான் 1 மற்றும் 3ம் எதிரிகளிடம் என்ன நடந்தது என்று கேட்டேன், அதற்கு அவர்கள் எதுவுமே சொல்லவில்லை, ஒருவித பதற்றத்தில் இருந்தார்கள். பின்னர் அசா1–ம் கேட்டேன், அவரும், அவர்கள் இருவரும் எதுவும் சொல்லவில்லை என்று

சொன்னார். நான் பாலத்தின் கீழே பார்த்தபோது, போதுராஜா தண்ணீரில் ஓரமாக கிடந்தார். பாலத்தின் கீழே இடுப்பளவு தண்ணீரில் தலை மேலாக பாலத்தின் கீழே உள்ள ஆட்கள் இறங்கி செல்லும் Ramp–ல் கிடந்தார். உடனே நானும், அசா1 அய்யனாரும் போதுராஜாவை தூக்கி மேலே கொண்டு வந்தோம். 1 மற்றும் 3 எதிரிகளை உதவிக்கு அழைத்தபோது அவர்கள் வரவில்லை. நானும், அசா1ம் சிரமப்பட்டு போதுராஜாவை மேலே கொண்டு வந்தோம். மேலே கொண்டு வைத்தபோது ஊர்க்காரர்கள் வந்து விட்டார்கள். பின்னர் யாரோ கூட்டத்தில் இருந்தவர்கள் 108 ஆம்புலன்சுக்கு போன் செய்தார்கள், சிறிது நேரத்தில் ஆம்புலன்ஸ் வந்து விட்டது. ஆம்புலன்ஸில் போதுராஜாவை பெரியகுளம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தோம். நாங்கள் பைக்கில் ஆம்புலன்ஸ் பின்னால் மருத்துவமனை வந்தோம். மருத்துவமனையில் ECG எடுத்து பார்த்துவிட்டு போதுராஜா இறந்து விட்டதாக சொன்னார்கள். பிரேத பரிசோதனைக்காக தேனி அரசு மருத்துவமனைக்கு பிரேதம் கொண்டு செல்லப்பட்டது, நள்ளிரவு ஆகிவிட்டதால் அன்று பிரேத பரிசோதனை செய்யவில்லை, நான் வீட்டுக்கு வந்து விட்டேன். மறுநாள் காலை தேனி அரசு மருத்துவமனைக்கு சென்றேன், அங்கு உறவினர்கள் நிறைய பேர் இருந்தார்கள். போஸ்ட்மார்டம் நடத்துவதாக சொன்னார்கள். போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்கள்.

<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலீசார் என்னை விசாரித்தபோது நான் முதல் விசாரணையில் கூறியதைத்தான் சொன்னேன். முதலில் எனக்கு சம்பவத்தை பற்றி யார் சொன்னார்கள் என்றால் அய்யனார் மனைவி பாக்கியலட்சுமி சொன்னார். நான் சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் சுமார் 10மணியிருக்கும். நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது அசா1 மற்றும் 1 மற்றும் 3 எதிரிகள் இருந்தாரகள். சம்பவ இடமான தேசிய நெடுஞ்சாலையில் அதிக போக்குவரத்து நிறைந்த பகுதி என்றால் இல்லை, அதிக போக்குவரத்து கிடையாது. எனது மொபைல் போனில் அழைத்து தகவல் சொன்னார். பாலத்திலிருந்து வாய்க்கால் எத்தனை அடி உயரமிருக்கும் என்றால் 15 அடி உயரமிருக்கும், அன்று நல்ல இருள் ஆகும்.

மேலிருந்து பார்த்தால் கீழே உள்ள உருவம் தெரியாது என்றால் இல்லை, தெரியும். எதிரிகளை கூப்பிட்டதுபோது அவர்கள் உதவிக்கு வரவில்லை என்று போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை, போலீசார் கேட்காததால் சொல்லவில்லை. போதுராஜா தண்ணீரில் விழுந்த நேரம் எனக்கு தெரியாது. எதிரிகள் பதட்டத்தில் இருந்த விவரத்தை போலீசாரிடம் சொன்னேனான என்றால் எனக்கு ஞாபகமில்லை. 108 ஆம்புலன்ஸ்க்கு யார் போன் செய்து வரச் சொன்னார்கள் எனக்கு தெரியாது. நான் சம்பவ இடம் சென்று அரைமணி நேரத்தில் ஆம்புலன்ஸ் வந்தது. ஊர்க்காரர்கள் நாங்கள் போதுராஜாவை தண்ணீரிலிருந்து தூக்கி மேலே வந்த 5 நிமிடத்தில் வந்தார்கள். சம்பவ இடத்தில் நான் வேறு என்ன என்னவைகளை பார்த்தேன் என்றால் போதுராஜாவின் மொபைல்போன் தண்ணீரில் கிடந்ததை பார்த்தேன், வேறு எதையும் பார்க்கவில்லை. 108 ஆம்புலன்ஸில் போதுராஜாவுடன் யார் சென்றார்கள் என்று தெரியாது. நாங்கள் தண்ணீரிலிருந்து போதுராஜாவை தூக்கி வந்தபோது பேச்சு மூச்சு இல்லை. 108 ஆம்புலன்ஸில் உயிர் இருந்தால்தான் மருத்துவமனைக்கு கொண்டு செல்வார்கள், இல்லாவிட்டால் கொண்டு செல்ல மாட்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 108 ஆம்புலன்சில் டிரைவர் மற்றும் டெக்னீசியன் இருந்தார்கள். போதுராஜா என்ன உடை அணிந்திருந்தார் என்று ஞாபகமில்லை. போலீசார் 108 ஆம்புலன்ஸ் வருவதற்கு முன்பு வந்து விட்டார்கள். போலீசார் வந்து 15 நிமிடங்கள் கழித்து 108 ஆம்புலன்ஸ் வந்தது. போலீசார் வந்தபோது சம்பவ இடத்தில் 20 பேர் இருந்தார்கள். எதிரிகளும் சம்பவ இடத்தில் இருந்தார்கள். போலீசார் சம்பவ இடத்தில் வைத்து எதிரிகளை விசாரித்தார்களா என்று எனக்கு தெரியாது. பெரியகுளம் மருத்துவமனையில் போதுராஜா இறந்ததாக எத்தனை மணிக்கு தெரிந்தது என்றால் சுமார் 11 மணியளவில் தகவல் தெரிந்தது. போதுராஜா இறந்ததாக சொன்னவுடன் மருத்துவமனைக்கு போலீசார் வந்தார்களா என்றால் அதுபற்றி தெரியாது. போதுராஜா இறந்த தகவலை போலீசாரிடம் நானோ, அய்யனாரா சொன்னோமா என்றால் நான் சொல்லவில்லை, அய்யனார் சொன்னாரா என்று தெரியவில்லை. வழக்கு சம்பந்தமாக யார் புகார் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. இறந்து போன

போதுராஜா எனது உறவினர் என்பதால் போலீசார் சொல்லிக் கொடுத்து நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமில்லை என்றாலும், போதுராஜா மிகுந்த குடிகாரர் என்பதால் அதிக போதையில் பாலத்திலிருந்து தானாக கீழே விழுந்து அவருக்கு இறப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

<u>2 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனக்கு சம்பவம் பற்றி தகவல் சொன்னது பாக்கியலட்சுமிதான் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. எனக்கு சம்பவம் பற்றி 10 மணிக்கு தகவல் கிடைத்தது, எனது அண்ணி பாக்கியலட்சுமிக்கு எத்தனை மணிக்கு தகவல் கிடைத்து என்று நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. சம்பவ இடத்திற்கு நான் செல்வதற்கு சுமார் 15 நிமிடங்கள் ஆனது. நான் சம்பவ இடம் சென்றபோது அசா1 மற்றும் 1 மற்றும் 3 எதிரிகள் இருந்தனர். போலீசார் விசாரித்தபோது அய்யனாரும், எங்கள் உறவினர்களும் இருந்தார்கள் என்று சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். பாலத்தின் கீழே முதலில் அசா1 தான் இறங்கினார். இறந்துபோன போதுராஜா பள்ளத்தில் தெற்கு பக்கம் கிடந்தார். தண்ணீர் முழங்கால் அளவு இருந்தது. போதுராஜா நெஞ்சு அளவு தண்ணீரில் மூழ்கியிருந்தார். தண்ணீரிலிருந்து ஓரத்திற்கு யார் கொண்டு வந்து சேர்த்தார்கள் என்று தெரியாது. பாலத்திற்குகீழே போதுராஜாவை தூக்க இறங்கியபோது பாலத்தில் தண்ணீர் பாட்டில், செருப்பு மற்றும் இதர பொருள்கள் இருந்ததை கவனித்தேனா என்றால் இல்லை. போலீசார் விசாரணையில் நான் தண்ணீர் பாட்டில், செருப்பு ஆகியவைகள் இருந்ததாக கூறவில்லை. நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், இறந்த போதுராஜா எனக்கு அண்ணன் என்பதாலும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. போதுராஜா மிகுந்த குடிகாரர் என்பதால்

அதிக போதையில் பாலத்திலிருந்து தானாக கீழே விழுந்து அவருக்கு இறப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே ,
என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால்,
கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு
படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை,
ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில்
கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்/- S.சமீனா)
21.10.2024
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.